**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**

***************

**<u>ஊடக அறிக்கை</u>**

**<u>“புலனாய்வு மற்றும் தேசிய பாதுகாப்பு” தொடர்பான</u>**

**<u>ஒருநாள் இணைய செயலமர்வு</u>**

**<u>“புலனாய்வு மற்றும் தேசிய பாதுகாப்பு”</u>** தொடர்பான ஒருநாள் இணைய ரீதியான செயலமர்வு ஒன்று இலங்கை பொலிஸ் மற்றும் புலனாய்வு உத்தியோகத்தர்களுக்காக இந்திய அரசாங்கத்தின் பொலிஸ் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி திணைக்களத்தினால் (BPR&D), பெப்ரவரி 16 ஆம் திகதி நடத்தப்பட்டது. இந்த செயலமர்வில் உரை நிகழ்த்திய இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ கோபால் பாக்லே அவர்கள், இவ்வாறான பயிற்சி திட்டங்கள் மூலமாக இருதரப்பினருக்கு ம் பரஸ்பர நலன்கள் கிடைக்கும் அதேவேளை இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர்களின் ஆளுமையை மேலும் விருத்தி செய்வதற்கும் வழிசமைக்கின்றது என குறிப்பிட்டார். பாதுகாப்பு ரீதியாக மேலெழும் சவால்களுக்கு இலங்கை மற்றும் இந்தியா ஒன்றிணைந்து முகம்கொடுக்க வேண்டிய தேவை இருப்பதை இந்திய உயர்ஸ்தானிகர் இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டியிருந்தார். அத்துடன் இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதற்கும் அவர் அழைப்பு விடுத் துள்ளார். இந்திய பாதுகாப்பு தரப்பினர் மற்றும் இலங்கை அதிகாரிகளிடையில் தகவல் மற்றும் அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கு ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் பொறிமுறையினை பாராட் டிய உயர் ஸ்தானிகர் அவர்கள், இந்தியாவுக்கு தப்பிச் சென்ற இலங்கையைச் சேர்ந்த குற்றவாளிகளை இலங்கை அதிகாரிகளின் கோரிக்கைக்கு அமைவாக இந்திய பாதுகாப்பு தரப்பினர் அண்மைய மாதங்களில் உடனடியாக கைது செய்திருப்பது குறித்தும் விசேடமாக சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்திய அரசின் உள்துறை அமைச்சின் விசேட செயலாளர் திரு வி எஸ் கே கௌமுடி அவர்கள் சிறப்பான முறையில் இந்த செயலமர்வு ஒழுங்கமைக்கப்பட்டமைக்கு தனது பாராட்டுக்களை தெரிவித்திருந்தார் . விசாரணை தொடர்பான விடயங்களில் இந்தியாவின் உதவியினை பெ றும் சந்தர்ப்பங்களின் போது பரஸ்பர சட்ட உதவி உடன்படிக்கையின்

சரத்துக்களை இலங்கை பாதுகாப்பு அமைப்புக்கள் பயன்படுத்த முடியும் என்று ம் அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கை பொலிஸ் விசேட பிரிவின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு டி சீ ஏ தனபால இந்த செயலமர்வின் தீர்மானங்களை மெச்சிய அதேவேளை, இந்த செயலமர்வினை ஒழுங்கமைத்த இந்திய அரசாங்கத்திற்கு பாராட்டுக்களையும் தெரிவித்திருந்தார்.

ஜனவரி 27 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுதும் நடைபெற்று வரும் e-ITEC (இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு) நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இந்த செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அதேவேளை இதன் மூலமாக முக்கிய பிரமுகர்களுக்கான அச்சுறுத்தல்கள், அடிப்படைவாதம் மற்றும் பயங்கரவாதம் உள்ளிட்ட தேசிய பாதுகாப்பு தொடர்பான விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இணையத்துறை (டொமைன்) நிபுணர்களான திரு டி.பி.சிங்க, திரு சுதீப் லக்தகியா மற்றும் திரு.பிரபாகர் அலோக் ஆகியோர் இந்தியாவை பிரதிநிதித் துவப்படுத்தி செயலமர்வில் கலந்துகொண்டு இலங்கையைச் சேர்ந்த பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் , சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் உள்ளிட்ட 25க்கும் அதிகமான பொலிஸ் உத்தியோகத்தர்களு டன் தமது அனுபவங்களை பகிர்ந் திருந்தார்கள். தற்பொழுது நடைபெற்று வரும் இணையரீதியான பயிற்சித் திட்டத்தின் கீழ் பட்டியலிடப்பட்டிருக்கும் 10 கற்கைநெறிகளில் 05 மாதிரிகள் 125 இலங்கை பொலிசாரின் பங்கேற்புடன் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்

**************

கொழும்பு

17 பெப்ரவரி 2021